**கம்பஹா பிரதேச சபை - 2020**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கம்பஹா பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கம்பஹா பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.
1.4.2(ஆ), 1.4.2(இ)

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 3.9 | நிதிக்கூற்றுக்களில் பாதீடு செய்யப்பட்ட தகவல்களை ஒப்பீடு செய்வதற்கு இலகுவான முறையில் உள்ளபடியான, பாதீடு செய்யப்பட்ட மற்றும் முன்னைய சமமான காலப்பகுதியில் உள்ளபடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய பெறுமதிகளுக்கிடையே ஏதாவது போதியளவான | 3.9 / 3.15 முன்னைய ஆண்டுகளில் காணப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான கணக்கு முறைமைக்கு பதிலாக பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2017 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் முதலாவது தடவையாக 2020 ஆம் | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மாற்றங்கள் உள்ளதாயின் அவற்றிற்குரிய காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டமையால் உள்ளூராட்சித் திணைக்களத்தின் மூலம் தொடர்ந்தும் வழங்கப்படுகின்ற ஆலோசனையின் அடிப்படையில் எதிர்காலத்தின் போது கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,359,730 தொகையான பெற வேண்டிய வியாபார நிலைய வாடகை சரியான அங்கீகாரமின்றி இருப்பு மற்றும் ஒதுக்க கணக்கில் பதிவழிக்கப்பட்டமையின் காரணமாக பெறவேண்டிய வியாபார நிலைய வாடகை அப்பெறுமதியால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வழங்கப்பட்டுள்ள ஆலோசனையின் பிரகாரம் சட்டரீதியாக அறவிடுவதற்கு முடியாதிருந்ததுடன் இனங்காணப்பட்ட வியாபார நிலைய வாடகை, இருப்பு மற்றும் ஒதுக்க கணக்கில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் வருமானங்களை இனங்கண்டு முறையான அங்கீகாரத்தைப் பெற்று இருப்பு மற்றும் ஒதுக்க கணக்கில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டிய கலி பவுசர் வருமானம், கழிவுப்பொருள் விற்பனை, சபையினால் மேற்கொள்ளப்பட்ட நிர்வாக செலவினங்கள் மற்றும் உப வாடகை முறையின் கீழ் கடை இலக்கம் 05 இனை கையளிப்பதற்காக கிடைத்த வருமானங்களின் கூட்டுமொத்தம் ரூபா 647,957 தொகை வைப்பாக காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் மிகை அப்பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கலி பவுசர் வருமானம் கழிவுப்பொருள் விற்பனை மற்றும் உப வாடகை திட்டத்தின் கீழ் கடை இலக்கம் 05 இனை கையளிப்பதற்கு உரிய பணம் 2021 ஆம் ஆண்டின் வருமானத்தில் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். நிர்வாக செலவினங்கள் தொடர்பாக எதிர்காலத்தின் போது நடைபெறுகின்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போது இந்த பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடப்பட்டு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | வருமானமாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கொஸ்கஹலந்த காணியின் கிரயம் மற்றும் இழப்பீட்டுப் பணம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு வருமானக கணக்கீடு செய்வதற்கு பதிலாக காணிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டதன் காரணமாக ரூபா 235,842 காணி மீதி மற்றும் மிகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வேலை பூர்த்தி செய்யப்படாத வீதிகள், மதகுகள் மற்றும் பாலங்களுக்காக ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 128,998,518 தொகை நடைமுறை வேலை கணக்கில் வரவு வைப்பதற்கு பதிலாக சொத்துக்கள் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | 2021 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | நடைமுறை வேலையாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 பெறவேண்டிய மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் மாகாண சபையின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக கிடைக்க வேண்டிய மீதி ரூபா 116,479,164 இனை அறவிடுதல் நிலுவையாகவிருந்த 1-3 வருடங்கள் வரை ரூபா 11,288,287 மற்றும் 5-10 வருடங்கள் வரை ரூபா 2,667,712 தொகை என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் மாகாண சபையின் கீழ் அமுல்படுத்தப் படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக கிடைக்க வேண்டிய பணம், பெற வேண்டிய மீதியின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணம் கிடைக்கின்ற முறையின் பிரகாரம் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட்டுள்ள துடன் கிடைக்காது என உறுதிப்படுத்தப்படுகின்ற மீதிகள் மாத்திரம் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டுள்ளது. ஏனைய மீதிகள் நிதி மீளளிப்பு செய்யப்படும் வரை முன்கொண்டு வரப்பட்டுள்ளது. | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 52,803,165 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 9,956,410 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீதவரியும் வரியும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் நேரொத்த அறிக்கையின் பிரகாரமான பெறுமதிகளுக்கிடையே ரூபா 61,765 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் பெறவேண்டிய ஆதனவரி மீதி ரூபா 38,780,648 தொகையில் களஹிட்டியாவ உப அலுவலகத்தில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 5,887,319 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 10 வருடங்களை விஞ்சிய நிலுவையாக இருந்த ஆதனவரியை அறவிடுவதற்காக தனித்தனியான பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு அந்த பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட முகவரியின் பிரகாரம் சபையின் உத்தியோகத்தர்கள் குழுவாக ஈடுபடுத்தப்பட்டு நிலுவை ஆதனவரியை சேகரிக்கும் வேலைத்திட்டமொன்று பிரயோக ரீதியில் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படுவதுடன் அதனிடையே Covid தொற்றுநோய் நிலைமை 2020 ஒக்தோபர் மாதம் முதல் திசெம்பர் இறுதி வரையும் மீண்டும் எழுந்திருந்தமையால் உரிய ஆதனவரி நிலுவை பணத்தை சேகரித்தல் மீண்டும் தடைப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ஆதனவரி மீதியை குறைப்பதற்கு எடுக்கப்பட்ட செயற்பாடுகள் பாதிப்படைந்திருந்தன. | நிலுவை வரியை அறவிடும் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2.2 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குடை வாடகை நிலுவை வருமான காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 3-5 வருடங்களுக்கிடையிலான மீதி ரூபா 223,580 தொகை, 5-10 வருடங்களுக்கிடையிலான மீதி ரூபா 594,234 தொகை, 10 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 1,446,235 ஆக காணப்பட்டதுடன் ஹெனரத்கொட உப அலுவலகத்திற்குரிய முத்திரை வைக்கப்பட்ட 05 கடைகள் மற்றும் முத்திரை வைக்கப்படாத 06 கடைகள் என்பவற்றிலிருந்து அறவிட வேண்டிய நிலுவைப் பணம் ரூபா 734,867 மற்றும் தண்டப்பணம் ரூபா 75,877 என்பவற்றை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கடை வாடகையை அறவிடும் சதவீதத்தின் பிரகாரம் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கடை வாடகை செலுத்தாதிருந்த வியாபார நிலையங்களின் வாடகையாளர்களை கண்டறிய முடியாமை மற்றும் சில வாடகையாளர்கள் மரணமடைந்த வியாபார நிலையங்கள் பல எண்ணிக்கையில் காணப்பட்டமையினால் அந்த இடங்களை இனங்கண்டு உரிய சிட்டையிடல்களை பதிவேடுகளிலிருந்து அகற்றுவதற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் ஊடாக மேல் மாகாண ஆளுனருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கடை வாடகை அறவிடலை நாளதுவரையாக்கு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2.3 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டிற்காக 40 தொலைத்தொடர்பு கோபுரங்களிலிருந்து வியாபார வரி அறவிடப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டிற்காக 29 கோபுரங்களிலிருந்து மாத்திரம் வரி அறவிடப்பட்டிருந்தது. | பிரதேச சபைக்குச் சொந்தமான ஹெனரத்கொட உப அலுவலகத்திற்குரிய 07 தொலைபேசிக் கோபுரங்கள் மற்றும் களஹிட்டியாவ உப அலுவலகத்திற்குரிய 04 கோபுரங்களுக்காக வியாபார வரித் தொகை செலுத்தப்படாதிருந்ததுடன் இந்த நிலைமை தொடர்பாக உரிய தொலைபேசிக் கோபுரங்களுக்குரிய கம்பனிகளுக்கு தற்பொழுது எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதனை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### 3.1.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கணேமுல்ல பழைய தபால் அலுவலக வளவில் டெலன்ட் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ நிறுவனத்திற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் வாடகைக்கு வழங்கப்பட்டமையால் 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு அறவிட வேண்டிய வாடகை மற்றும் தண்டப்பணம் ரூபா 1,446,235 இனை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு முடியாதிருந்தது. | முன்னர் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் உரிய இடம் வாடகைக்கு வழங்கப்பட்டமையின் காரணமாக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முடியாதிருந்தது. எவ்வாறாயினும் உரிய உத்தியோகத்தர்களினால் நிலுவை பணத்தொகையில் ரூபா 102,564 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் வாடகைக்கு வழங்கும் போது உடன்படிக்கை கைச்சாத்திடுதல் கட்டாயமானதாகும். |